Date. 19.11.2025.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

**OS.19/2024**

**பி.வா.சா. 1**

**பெயர். திருமதி. பல்கீஸ்பேகம்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனது கணவர் பெயர் நசீர் அஹமது என்றால் சரிதான். 2 முதல் 6 பிரதிவாதிகள் எனது மகள்கள் என்றால் சரிதான். எனக்கும் நசீர் அகமது என்பவருக்கும் எப்போது திருமணம் ஆனது என்றால் 1983 ஆம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. என்னுடைய கடைசி மகள் ரஹ்மத்(6 ம் பிரதிவாதி) 1999 ஆம் ஆண்டில் பிறந்தார். எனக்கு 2004 ஆம் ஆண்டில் மோட்டார் வாகன விபத்து நடந்தது. அதில் எனக்கு முதுகு தண்டுவடத்தில் அடிபட்டது. அதனால் என்னால் நடக்க முடியாது. படுத்த படுக்கையாக இருக்கும் நிலை ஏற்பட்டது. எனது மகள்களுக்கு திருமணமாகிவிட்டதா? என்றால் திருமணம் ஆகிவிட்டது. கடைசி மகளுக்கு இப்போதிலிருந்து இரண்டு வருடத்திற்கு முன்பு அதாவது 2023 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. வாதியை எனக்கு தெரியும். அவர் எங்களது வீட்டிலும் வேலை செய்து வந்தார். எங்களது கடையிலும் வேலை செய்து வந்தார். எங்களது வீட்டில் தான் தங்கியிருந்தார். 2014 ஆம் ஆண்டில் இருந்து வாதி சுமையா பானு எங்களது வீட்டில் தங்கி இருந்தார் என்றால், 2014 ஆம் ஆண்டில் தங்கி இருந்தார். ஆனால் 1 மாதம் இருப்பார். அதன் பிறகு போவார் வருவார். என் கணவர் நசீர் அகமதுவின் சொந்த ஊர் திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் கிராமம் ஆகும். வாதி சுமையா பானுவின் அப்பா ஊரும் தேனி மாவட்டம் போடி என்றால் சரிதான். அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் தெரிந்தவர்கள், நண்பர்கள் என்றால் சரிதான். சுமையா

பானுவின் அப்பா பெயர் சேக் அப்துல்லா என்றால் சரிதான். அவரும் போடி கிராமத்தை விட்டு விட்டு விக்கிரவாண்டி செண்டியம்பாக்கம் கிராமத்திற்கு வந்துவிட்டார் என்றால் சரிதான். எனது கணவர் என்னை திருமணம் செய்து கொள்வதற்கு முன்பே விழுப்புரம் வந்து விட்டாரா? என்றால், திருமணத்திற்கு பிறகு தான் விழுப்புரம் வந்தார். நான் விழுப்புரத்தில் வண்டி மேட்டில் குடியிருந்தேன். ஹாஸ்பிடல் ரோடு, வண்டிமேடு, எண்-12 ல் குடியிருந்தேன். அந்த ஹாஸ்பிடல் ரோடு வருவதற்கு முன்பு ராஜா நகரில் குடியிருந்தோம். விழுப்புரம் வந்து எனது கணவர் ஹாஸ்பிடல் ரோடு, எண்- 12 ல் உள்ள இடத்தை மனையாக வாங்கி வீடு கட்டினார். எனது கணவர் அவர் பெயரில் ஒரு மனையும், அவரது அண்ணன் அவரது பெயரில் ஒரு மனையும் வாங்கி, வீடு கட்டிய பிறகு எனது கணவருக்கு அவரது அண்ணன் தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துவிட்டார். எங்களது முஸ்லிம் மத சம்பிரதாயப்படி ஆண்கள் 4 திருமணம் செய்து கொள்ளலாம் என்றால் சரிதான். எனக்கு விபத்து ஏற்பட்டு படுத்த படுக்கையாகி விட்டதால், என்னை கவனித்துக் கொள்ளவும், எனது மகள்களை கவனித்துக் கொள்ளவும், எனது கணவர் வாதி சுமையா பானுவை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல. அவர்கள் இருவருக்கும் 24/12/2012 தேதியில் நாகை மாவட்டம், சீர்காழியில் சேந்தங்குடி ஜாமியா மசூதியில் திருமணம் நடைபெற்றது என்றால், அப்படிதான் சொன்னார்கள். நாங்கள் சென்று கேட்டதற்கு அப்படியெல்லாம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அந்த மசூதியில் திருமணம் நடந்ததற்கு பதிவு சான்று கொடுத்துள்ளார்கள் என்றும், அந்த பதிவுச் சான்றை நான் பார்த்தேனா என்றும், கேட்டால் நான் அந்த பதிவு சான்றை பார்க்கவில்லை. எனக்கு படிக்கத் தெரியாது. நாங்கள் சென்று மசூதியில் கேட்டதற்கு அப்படியெல்லாம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். மேலும் எங்களுக்கு நாங்கள் அப்படியெல்லாம் செய்ய மாட்டோம் என்று எழுதிக் கொடுத்தார்கள். அவ்வாறு எழுதிக் கொடுத்ததை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதுபோன்று எதையும் மசூதியில் எழுதிக் கொடுக்கவில்லை என்றும், நான் எழுதிக் கொடுக்கவில்லை என்று சொல்வது தவறு என்றும் சொன்னால் சரியல்ல. அந்த திருமணத்தை முகமது ருக்மான் என்பவர் தான் செய்து வைத்துள்ளார் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. செண்டியம்பாக்கம் கிராமத்தை சேர்ந்த ஜைனுல்லா புதின், கரீம் ராவுத்தர் ஆகியோர் அந்த வாதியின் திருமண பதிவு ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால், அவர்கள் அனைவரும் பொய் சாட்சிகள். என் கணவருக்காக மாப்பிள்ளை

வீட்டாரின் சார்பாக ஹைதர் அலி என்பவர் அந்த திருமண பதிவு சான்றில் கையெழுத்து போட்டு உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஹைதர் அலியும் இங்கு வந்து வாதிக்கு ஆதரவாக சாட்சி சொல்லிவிட்டு சென்றுள்ளார் என்றால், அதுபோன்று யாரும் இல்லை. இந்த திருமணத்திற்கு பிறகு நசீர் அகமதுவும், வாதி சுமையா பானுவும் கணவன், மனைவியாக ஒன்றாக வசித்து வந்துள்ளார்கள் என்றால், சரியல்ல. அதுவும் கதவு எண் 12. ஹாஸ்பிடல் ரோடு, வண்டி மேட்டில் ஒன்றாக வசித்து வந்துள்ளார்கள் என்றால், சரியல்ல. வாதி வருவார். இருப்பார் அவ்வளவுதான். என்னை பார்த்துக் கொள்ளத்தான் வந்தார். வாதிக்கும் எனது கணவர் நசீர் அகமதுவிற்கும் குழந்தை பிறந்தது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மொத்தம் மூன்று குழந்தைகள் என்றால், எனக்குத் தெரிந்து மூன்று குழந்தைகள் என்று சொல்வார்கள். அந்த குழந்தைகள் கொஞ்ச காலம் எனது வீட்டில் இருந்தார்கள். அவர் குழந்தைகளுடன் வரபோக எங்கள் வீட்டில் இருப்பார்கள். எனது வீட்டுக்காரர் இறந்த பிறகு தான் வாதி 3 பிள்ளைகளை கூட்டிக்கொண்டு எனது வீட்டிற்கு வந்தார். வாதி எனது வீட்டில் கர்ப்பிணியாக இருக்கும்போது, எனது வீட்டிற்கு செவிலியர் வந்து வாதியை பார்த்துவிட்டு மருந்து கொடுத்து விட்டு செல்வார்கள் என்றால், அப்படியெல்லாம் யாரும் வந்ததில்லை. அதுபோல் வந்து போனதற்கான தாய்-சேய் பாதுகாப்பு அட்டை என்பதை கொடுத்துள்ளார்கள் என்றால், வாங்கியிருப்பார்கள் ஆனால் அதுபோன்று இல்லை. அதில் ஹாஸ்பிடல் ரோடு என்றும், கணவர் பெயர் நசீர் அகமது என்றுதான் உள்ளது என்று சொன்னால், அவர்கள் கணவன் மனைவி இல்லை. 3 குழந்தைகளின் கர்ப்ப காலம், மற்றும் குழந்தை பிறந்ததற்கு பிறகும் தடுப்பூசி சேவை உட்பட அனைத்தையும் அந்த விலாசத்தில் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு 3 குழந்தைகளுமே பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் தான் பிறந்தது என்றால் இருக்கலாம். எனக்கு தெரியாது. வாதியின் பிரசவத்தின் போது எனது கணவர் நசீர் அகமது தான் மருத்துவமனையில் சேர்த்து கூட இருந்து பிரசவத்தை முன்னின்று பார்த்து வந்தார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. சரியல்ல. மருத்துவமனை பதிவேடுகளில் வாதியின் கணவர் பெயர் நசீர் அகமது என்றுதான் பதிவாகியுள்ளது என்று சொன்னால், இருந்திருக்கலாம். அது குறித்து எனக்கு தெரியாது. 1 ம் வாதியின் முதல் குழந்தை பெயர் நசீகா என்றால் சரிதான். 2 ம் குழந்தையின் பெயர் நிதா என்றால், 3 ம் குழந்தையின் பெயர் மக்தூம் என்றால், சரிதான். பெயர் சரிதான். மற்ற விவரங்கள் எனக்கு தெரியாது. இந்த மூன்று

குழந்தைகளுமே ஜிப்மர் மருத்துவமனையில் பிறந்ததாகவும், அவர்களது தந்தை பெயர் நசீர் அகமது என்றும், அம்மாவின் பெயர் சுமையா பானு என்று உள்ளதாகவும், மருத்துவமனை பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவர்கள் சொல்லி எழுதியிருக்கலாம். நசீர் அகமது 22/11/2022 தேதியில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருக்கு வாரிசு சான்றை வாதி வாங்கியுள்ளார் என்றால், சரியல்ல. அது பொய்யான சான்றிதழ். நான் எனது கணவரின் வாரிசு சான்று வாங்கி விட்டேனா? என்றால், வாங்கியிருக்கிறேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா? என்றால், தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு எந்த ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரிதான். வாதி வாங்கியுள்ள வாரிசு சான்றிதழில் எனது பெயர், எனது 5 மகள்களின் பெயர்கள், வாதி, வாதியின் 3 குழந்தைகள் ஆகிய அனைவர் பெயரும் சேர்த்து வாங்கியுள்ளார் என்றால் அவர் வாங்கியிருக்கலாம். ஆனால் அது பொய்யான சான்றிதழ். இந்த சான்றிதழ் விசாரணையின் போது எனது ஆதார் அட்டை கேட்டிருந்தார்கள். நான் கொடுத்துள்ளேன். எனது பிள்ளைகளின் ஆதார் அட்டையையும் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் வாதியும் அவரது மற்றும் அவரது பிள்ளைகளின் ஆதார் அட்டைகளை கொடுத்திருப்பார் என்றால் அந்த வாரிசு சான்றிதழ் பொய். அந்த ஆதார் அட்டைகளிலும் வாதியின் கணவர் பெயர் நசீர் அகமது என்றும், குழந்தைகளின் தந்தை பெயர் நசீர் அகமது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இருக்கலாம். பொய்யாக சொல்லி இருப்பார்கள். அரசு அதிகாரிகள் முறையான விசாரணைக்கு பிறகு தான் நசீர் அகமது என்பவருக்கு வாதிகளும் வாரிசுகள், நாங்களும் வாரிசுகள் என்று பரிந்துரை செய்து அதன் பிறகு வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால், சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ளது நானும், வாதி சுமையா பானுவும் என்று சொன்னால் சரிதான். அது வா.சா.ஆ.21 ஆகும். மேலும் மற்றொரு புகைப்படத்தில் எனது கணவருடன் சேர்த்து நான், வாதி சுமையா பானு உள்ளோம் என்று சொன்னால் சரிதான். அது வா.சா.ஆ.22 ஆகும். நாங்கள் மெக்கா, மெதினாவிற்கு சென்றோம் என்றால் சரிதான். நான், வாதி சுமையா பானு, எனது கணவர் ஆகியோர் ஒன்றாக சென்றோம் என்றால் சரிதான். அப்போது எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ளது எனது கணவர் என்றால் சரிதான். இருக்கலாம். எனது கணவர் வாதியின் குழந்தைகளோடு இருக்கிறார் என்று சொன்னால் சரிதான். அதேபோல் எனது கணவர் வாதியுடன் குழந்தையுடன்

ஒன்றாக இருக்கும் புகைப்படம் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். மேற்படி புகைப்படங்கள் வா.சா.ஆ.23 முதல் 29 வரையிலானவை ஆகும். (மேற்படி புகைப்படங்கள் குறியீடு செய்ய இயலாது என்று பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டது) எனது கணவர் இறந்ததற்கு பிறகு வாதியை வீட்டிற்கு வர அனுமதிக்கவில்லை என்று வாதி எங்களின் பேரில் மேற்கு காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார் என்றால், புகார் கொடுத்தார், அவர் எங்களிடம் காசு கேட்டு புகார் கொடுத்தார். புகார் கொடுத்து அந்த புகாரில் என்னை காவல்துறையினர் விசாரித்து அங்கு நான் வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அதில் மாதாமாதம் வாதிக்கு ரூபாய் 19000 ஜீவனாம்சமாக கொடுத்து விடுவதாக நான் ஒப்புக்கொண்டு எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து மிரட்டியதால் எழுதிக் கொடுத்தேன். நான் வாங்கிய வாரிசு சான்றிதழில் சுமையா பானு மற்றும் அவரது பிள்ளைகளை வாரிசுகளாக கொடுத்துள்ளார்களா என்றால் அப்படியெல்லாம் கொடுக்கவில்லை. நான் சொல்வது போல வாதிகளை சேர்க்காமல் வழங்கிய வாரிசு சான்றிதழ் தான் செல்ல தகுந்தது அல்ல, போலியானது என்று சொன்னால் சரியல்ல. சுல்தான் இப்ராஹிம் எனது வீட்டில் வாடகைக்கு குடியிருந்தவராவார். சாயிரா பானு என்பவர் அவரது மனைவி ஆவார். 1ம் வாதி வாடகை கேட்டு வந்தபோது, வாடகைதாரராக இருந்த சுல்தான் இப்ராஹிம், அவரது மனைவி சாய்ரா பானு, எனது மூத்தார் இத்திரிஸ் ஆகியோர் சேர்ந்து சுமையா பானுவை அடித்து விட்டார்கள் என்று சொன்னால், சரியல்ல. போலீசில் எழுத்துப்பூர்வமான புகாரை கொடுத்தார்கள். அவர்களுக்கும், வாடகைக்கும், சம்பந்தமில்லை. நாங்கள் தான் வாடகை வாங்கினோம். எங்களது வீட்டை கீழே தரைதளத்தில் 2 பேர்களுக்கும், முதல் தளத்தில் 2 பேர்களுக்கும் வாடகைக்கு விட்டுள்ளோம் என்றால் சரிதான். அவையெல்லாம் வியாபார நோக்கத்திற்காக தான் வாடகைக்கு விட்டுள்ளோம் என்றால் சரிதான். வாடகையாக எங்களுக்கு மொத்தம் ரூ.75,000/- வருகிறது என்றால் சரியல்ல. ரூ.50,000/- வாடகை வருகிறது. அந்த வாடகை தொகையில் தான் அவர்கள் ஜீவனாம்சம் பங்கு கேட்டார்கள் என்றால் சரிதான். இது சம்பந்தமாக முதலில் ஒரு பஞ்சாயத்து நடந்து நாங்கள் மாதம் ரூபாய் 15,000/- என 4 மாதங்கள் வாதிக்கு கொடுத்தோம் என்றால் சரிதான். அதன்பிறகு இரண்டாவதாக எங்களுக்குள் ஒரு பஞ்சாயத்து நடந்து வாதிக்கு மாதாமாதம் ரூ.19,000/- கொடுத்தோம் என்றால் சரிதான். கடைசியாக 10/11/23 தேதியில் ரூ.19,000/- கொடுத்தோம் என்றால் சரிதான். அதன் பிறகு நாங்கள் பணம் கொடுக்கவில்லை

என்றால் வழக்கு போட்டு விட்டார்கள் என்பதால் பணம் கொடுக்கவில்லை. நான் என் கணவர் இறந்து விட்டதால் விதவை சான்றிதழ் வாங்கியுள்ளேனா? என்றால் இல்லை. அரசாங்கத்தில் உதவித்தொகை வாங்க வேண்டும் என்றால் அரசாங்கத்திலிருந்து விதவை சான்றிதழ் வாங்க வேண்டுமென்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அதுபோன்று சுமையா பானு எனது கணவரின் இறப்பிற்காக விதவை சான்றிதழ் வாங்கியுள்ளார் என்றால், வாங்கியிருக்கலாம்.

**(குறுக்கு விசாரணை பகுதியாக நிறுத்திவைக்கப்பட்டு ஒத்திவைக்கப்படுகிறது.)**